10 AUG 1925
MADRAS
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - AUG 1925
MADRAS



உ

கடவுள் துணை

# ஸ்ரீ ஜெயநய செழுஞ்சோதிச் சுடராய் விளங்காநின்ற வெள்ளிமாமலை விளக்கம்.

---

(இவை)

ஸ்ரீ-மேரூர்க்கலப் பெருமை வாய்ந்த
கோயமுத்தூர் ஜில்லா சிக்குதாசம்பாளையம்
மேட்டுமாநகரவாசியும்
ஸ்ரீ-மாம்பழனி க்ஷேத்திரப் விஷைய வையாபுரி
வாலசமுத்திரம்.

மகா-ள-ள-ஸ்ரீ மருதமுத்துப்பிள்ளையவர்களின்
குமாரர்
உபாத்தியாயர் V. M. ஆறுமுகம்பிள்ளையவர்களின்
மாணாக்கனுமான
மேட்டுப்பாளைய உபாத்தியாயர்
வெங்கடாசலம் பிள்ளை குமாரன் V. தாமோதரம்
பிள்ளையாலியற்றி

ஷை-உபாத்தியாயர் மகா-ள-ஸ்ரீ V. M. ஆறுமுகம்
...ள்ளையவர்களால் பரிசோதிக்கப்பெற்று
...டி மேட்டுப்பாளையத்திலிருக்கும்
...ன் புதூர்ப முனிசெட்டியார் பாரியாள்
...னியப்பாளின் பொருளுதவியால்
...ளம் இம்மானுவேல் அச்சுயந்திர
...சாலையில் பதிப்பிக்கப்பட்டது.

---

விலை: அணா 2. 1925.

O.26:417
M25
170060

MADRAS
MADRAS

ஸ்ரீ-பா பழனி க்ஷேத்திரம், விஷய வைகாபுரி வாலசமுத்திரம் உபாத்தியாயர் V. M. ஆறுமுகம் பிள்ளையவர்களாலியற்றிய

## சாற்றுக்கவி

---

பூமேவு போகர் மலை முருகனிரு திருபாதம்
புயகமல சன்யதானப்
பூரணானந்த நிரைகருணை கடாக்ஷமிர்தம்
பொங்கியே தங்கு நிபுணம்
புங்கவன் விஷய வைகாபுரித்தலமதில்
புகழ் பெருகுவாலை நகர்வாழ்
பூமிமகிழ் சேரகுல ஆறுமுகதாசனான்
பூரித்து மெழுது சாற்று
மாமேவுலக்ஷ்மீகரம் குலவியிலகுமெழில்
மருவு கோயம்பதியதுசேர்
மாக்ஷிமை தங்குநற்காக்ஷி யொடுவானிநதி
வரும் வலப்பாகமதிலே
மகிமைப்பிரசங்க மேட்டுப்பாளையந்தனில்
வளமிகு வாழ்வுள்ளவர்
மறை முதல்வியே நின்றிருவடியை யென்னாளும்
மறவாத நெஞ்சமுள்ளான்
காமேவு க்ஷேமமிகு மகா-ள-ள-ஸ்ரீ
கனம் வெங்கடாசலம் பிள்ளையாம்
கர்த்தனே நின்னடியை ஸ்தௌத்தியம் செய்துமே
கருதியேயீன்றபாலன்
காதலித்தே வெள்ளியங்கிரியின் வழமெனக்
கருத்தினிலுருத்தியுள்ளம்
கந்தமிகவே கொளச் செந்தமிழ்ச்சந்ததம்

கர்ண நல்லறிவு சேரப்
பாமேவுமிவ்வுலகோர்புகழவேயெனும்
பச்சம்வைத்தச்சமின்றி
பணிந்து நல் ஞானசம்பந்தமோடு க்யானமாய்ப்
பாடினனீடுபுவியிற்
பரவிநற்கெதிப்பரத் ததியெனத் துதிபெருகி
பழவினைக்கழிவு தேடிப்
பதமலர்த்துளிர்தருநத் தாமோதரச் சிறியன்
பகருநற் பதிகமிதுவே.

அவையடக்கம்.

---

மணிகிரண பிரவிமுன்னிருள்நிற்க வொவ்வுமோ
மார்க்கமது யானறிந்து
மைந்தனனும்புலவர் கந்தபத மென்சிரம்
மருவிமரவாது யானும்
அணிதொண்டு செய்துபா மாலையைச்சாற்ற நல்
லறிவு தந்தாண்ட குறவர்
அகிலத்துதித்தெழும் வெள்ளியங்கிரியில்வாழ்
ஆதியாம் சோதிசுடரின்
பணிகொண்டு நானருசீர் கழிலாஸ்வர்யம்
பகர்ந்து முத்தமிழ்சுரந்து
பக்குவத்தோடுனது தத்வசாதுர்யமிகு
பலத்தினலுதித்தபாலன்
இனிதுண்டு வர்லைநகர் நாடக வாத்தியார்
இன்புசேராறுமுகமென்
னியல்பு நற்குருவெனத்தாமோதரச்சிறியன்
எழுதினேன் பழுதிலாது.

உ

ஜெகத்ரக்ஷகன் துணை

# விஜய விக்னேஸ்வரர் துதி

வெண்பா

தேவர் தவமியற்றும் சேர் வெள்ளியங்கிரிபா
மாலையை யான் றுதித்து மனத்தெளிவாய்—யாவர்க்கும்
முன்னுதித்த யானைமுகா மூஷிகமீதேறி வந்துன்
பொன்னெழுத்தா லுன்னருள் புனை

## சரஸ்வதி துதி.

வெண்பா.

கஞ்சமலர்த் தாள்பொருந்தும் காரணி பொன்னாரமணி
செஞ்சொல்கலைமிஞ்சிடுநற் செல்வமே—அஞ்சலொடு
நெஞ்சிற்றுதிக்கேனே நீயருளென்றுவதனில்
மிஞ்சுபுகழ்வெள்ளி பேர் விளக்கம்

## அறுசீர்கழில் நெடிலடி லாஸ்வரியப்பா ?

திங்களுட கங்கை சூடியே முடிமேற்
றிருவெண்ணீர் பாமபணிதிருவே
எங்கும நின்னருளைக்கொடுத்திடும் சிவனே
யினியவுன் றுதிதனையியம்ப
ஐங்கரன் முருகன் முள்பணிந்தேற்றி
அடியையார் சிறதாயாய்ந்து
மங்களமாகப்பதமலர்த்தாள் கொள்
வாணியின் அருளையும் சேர்த்துத்
தங்குமென்னுவில் சங்கரா சிவசம்
தமியன்நின் மாலையைச்சாற்ற
எங்குறை தீரும் வெள்ளியங்கிரிவாழ்
ஈசனே ஓம் நம சிவமே

(1)

முல்லையின் வனமும் ஆவின் வாய்த்தெப்பம்
மூஷிகவாகநல் விடமும்
நல்லருள் மடமும் நலவளச்சோலை
நாதர்வாள் பூண்டியினழகும்
வல்லவா அமைத்து வைத்தமே கிரிமேல்
வருதும் நின்னடியவர்தமக்கும்
அல்லல்கள் தீர்த்து ஆதரித்தெனையும்
ஆள்கொளும் உனதருள் பெருக்கி
இல்லையென்னது வரங்களைக்கொடுக்கும்
ஈசனேயென்சுவை நாவில்
சொல்ல நின்னருள் சேர்வெள்ளியங்கிரிவாழ்
சத்தனே ஓம்நம சிவமே

(௨)

அசகாவெனவே பூண்டியிற் சூளும்
அடியவர் பெருகவே கூடி
தாரதலமதிரச்சப்தங்களோங்கத்
தன்யமும் கொள்க நீருடி
உரவுடன் வெண்ணீர் திருவது பெருக
உகந்துமே நின்னுபதேசம்
பெரவருள்ப்பாடல் கொண்டுனைப்போற்றி
பிரியமாய்த்திருவெண்ணீர் பூசி
கரமது கூப்பி சிரமதிலேற்றி
காவடி தோளினிற் சேர்த்தி
திரமுரநின்னருள் வெள்ளியங்கிரிவாள்
சித்தனே ஓம் நமசிவமே

(3)

அரியவுன் பாதம் தொழுதிடச்சாக்ஷி
அஞ்செழுத்தேயலா லேது
உரியநாலொண்ணுப் ஊட்டுவித்தென்னை
ஓகவே செய்தருளோங்கப்
பரிவுட நின்றருள் அளது தந்து
பழவினைபோக்கி நீ யுகந்து
தெரியவே யுனதனு ஷ்டானத்தின் தெளிவில்
தெரிசனை தந்திட வேண்டும்
உசிபவென்னகத்தில் ஓம்நடம்புரிய
உத்தம சித்வசித்தோனே
அரியயன் காணு அடிமுடிச்சுடரே
ஆதியோம் வெள்ளி வாள் சிவமே

(4)

சீதை நல்வனமும் சீர்மிகு கனமும்
சேர்கமள் அறுவியின் சிறப்பும்
பாதையும் மடமும் பக்தர்வாள் இடமும்
பலமலர் வாசனைத்திடமும்
கோதை வல்லபையின் நாயகர் வாழும்
குளிர்ந்த நற்சோலை சூள் கிறிமே
லோதைய மில்லாதுன்பர்கட்கரசே
வுன்கழலிணையது பணிய
வேதை செய்யாதுன்மேருவின் வளப்பம்
விளங்குமே தண்டமுமெந்தன்
வாதையை நீக்கும் வெள்ளிபங்கிரிவாள்
வளமிகு ஓம் நம சிவமே

(5)

முல்லைசேர்காவும் முருகவேள் மேவும்
மூவர்கள் கூடிடு தாவும்
எல்லையில் வீரர் லக்கர்களுடன்வே
லெடுத்து வாதாடியே தேவர்
தொல்லை சேர்ந்துஞ்சித் தொழுதிட நீயுந்
துணையெனவுயிர் கொடுத்தாயே
வல்லையே யெந்தன் வல்லிருள் போக்க
வல்லவா தொல்புவி புகழத்
தில்லையில் மேவித்திடமுட நடஞ்செய்
திங்கள் சூளெங்குல தீபா
சொல்லை நீ தள்ளாய் வெள்ளியங்கிரிவாள்
சோமனே ஓம் நமசிவமே (6)

நாறுமித்தேசம் நேசமுன்சித்தம்
நட்புவைத்தாண்ட நன்னட்பே
சேரும்வரசனைபோற் செடிகளும், துளிர்த்து
தென்னைமா புன்னைவேல் வேங்கை
டாருமிவ்வுலகோர் தேடியுங்காணு
பாம்பொருளாகிய தருவும்
கூழதற்கினிய சொற்சுவை யூஞ்சல்
குகையும் கைதட்டிய சுனையும்
தேருறு பீமன் ஆரியகல்லும்
தின்னுமா சுவைகளிக்குன்றும்
நேரும்உன் சமுகம் வெள்ளியங்கிரிவாள் /ரி
நிமலனே ஓம் நம சிவமே (7)

பற்குணன் றவத்தைப்பார்க்கவே நினைந்து
பன்றியை அம்பினாலெய்து
விற்குணத் தொனிகள் செய்த நல்விடத்தை
வேண்டிநீ பூண்டியாய் வைத்து
நற்குணக்கிரீடி யாலங்கு நீயும்
நன்கலை யானதினாலே
சற்குண முள்ள ஆண்டியின்கலையாய்
சாற்றவுமேற்றது தோற்றம்
பொற்குணப்பாண்டு மைந்தர்கள் சூழ்ந்து
பொருந்தவே சயனித்த கிரிசேர்
நிற்குணம் வாய்ந்த வெள்ளியங்கிரிவாள்
நிமலனே ஓம் நம சிவமே (8)

தோரணகல் தூளிதக்கவகுகையும்
தொடர்ந்த நற்ஜோதி சஞ்சீவி
காரணமெனகும் விளங்கும் பொற்றருவும்
கருதிடின் மெய்ப்பகம் காண
பூரணமான மெய்ப்பொருள் தந்தான்
பொன்னடியென் முடியேற்க
ஆரணப்பொருளே பொனாது தீவினையை
அறுத்தொழித்திடும் அரகரனே
நாரணன் மருகன் நின்குருமுருகன்
நாடிய காவடி கொளவ
தாரணத்தோனே வெள்ளியங்கிரிவாழ்
அத்தனே ஓம் நமசிவமே

(9)

கற்பிதமாகவுனது நற்கிரிமேல்
கலையதைப் பயின்ற நற்சேடன்
பொற்பொருள் பெரும நாகேசுரர்தனையும்
பொருந்தவே பிரதிஷ்டைசெய்து
முற்பவமது தானுநற் பனமொனுமீன்
மொழியது பெற நினதருளின்
நற்பு நான் கொண்டு நானனுதினமும்
நலம்பெறத் திருமுத்துவாழி
விற்புரு மங்கையாள் வலப்பாகம்
வீற்றிருந்தாட்கொளும்விமலா
நற்கதிதருவாய் வெள்ளியங்கிரிவாழ்
நாதனே ஓம்நமசிவமே

(10)

சிங்கமும் யானை பன்றிமான் வேங்கை
சிறுத்தை செந்நாய் மறிவிடையும்
எங்கினும் உலவி வாழ்கின்ற குகையும்
எரிகள் நதி சுனைவளமும்
பங்கமிலாதங் கீதசங்கீதம்
பகர் பக்ஷி மயில் குயிலன்னம்
மங்களமாக நடிக்கின்ற மலைமேல்
வாழ்வுறு பஞ்சலிங்கேசா
எங்குறை கேட்டு நல்லருளூட்டும்
இன்பமே தென்பு சேரன்பே
கங்குல் போக்கெங்கள் வெள்ளியங்கிரிவாழ்
கர்த்தனே ஓம்நமசிவமே

(11)

அண்டர்கள் முனிவர் தொண்டுசெய்யோர்கள்
அரகராவென்றுனைத்துதித்து
தொண்டர்கள் நின்றிருப் பாடலைப்பாடித்
துதிக்க நின்னருளதுவுதிக்க
வண்டிசைபாட மணியசைந்தாட
வளர் பஞ்சநாதரின் தஞ்சம்
கொண்டுனதருளைக் கொடுத்திட நின்சேய்
கோறினெனின்றிருற்றாளை
அண்டி வீண்போமோ? தொண்டனையாட்கொள்
அப்பனே செப்பரிதான
சண்டனையுதைத்த வெள்ளியங்கிரிவாள்
தற்பரா ஓம்நமசிவமே
(12)

தக்கதோர் துவாத சாந்தத்திற்கூடை
தளம்ப மண்ணிரப்பி நின்சிரமேற்
பக்குவமாகவைத்து நின்ஜாலம்
பரவவும் வேண்டுதல் நிமித்தம்
தக்கவப்பாண்டியன் கைப்பிரம்பால்மெய்
தளும்புர வாங்கிப் பின்வாங்க
சிக்கெனவேயங்குற்றவர்யார்க்கும்
தெளிவுற வடிற்றளும் போங்க
முற்குலத்திருள் போக்குக்கமொழிசீர்
மொய்த்தவ தத்துவஞான
மிக்கவும் அருள்சேர் வெள்ளியங்கிரிவாழ்
விமலனே ஓம்நமசிவமே
(13)

சொல்லவே மகிழ்ச்சி கொண்டுவள்ளாளன்
தொழுதருசுவையுடன் சோறு
வல்லவா உண்ணுமென்றுனைக்கோரி
வாமத்த நீ வேசியர்வேறு
மல்லவா யில்லையெலன்னப்புசிக்க
மாற்கமீதல்ல வென்றோதித்
தள்ளவே பக்திசேர்தபநிருபன்
தாழ்ந்து தன் பத்தினியோடு
கள்ளமிலாது கலந்து பின்னன்னம்
கருகி நீ அருந்திடச்சொன்ன
உள்ள நேர்பிள்ளை வெள்ளியங்கிரிவாழ்
உத்தமா ஓம்நமசிவமே
(14)

மான்மழுவேந்தும் கரத்தினிற்சூலம்
வைத்து நின்மார்பினிற்சர்ப்பம்
தான் செழிக்கொங்க கருமதிக்கங்கை
தரித்திடு மாசடையோனே
நான் மிகத்துதித்துன் திருவடிகாண
நன்புவிமன் இன்பமும்சேர்ந்தான்
தேன்சொரிபருள்மா மழையதுபொழியத்
தித்திக்கும் சுவையமிர்தமே
பூண்டது வன்னலன்றிவேறேது
புனிதனேயினி துளசாது
ஆன்பல்சேர் நதிசூழ்வெள்ளியங்கிரிவாழ்
அப்பனே ஓம்நமசிவமே

(15)

ஆவதும் நீயே அழிப்பதும்நீயே
அண்டாண்டங்களும் நீயே
பாவலர் போற்றும் பக்தியும்நீயே
பண்புகள் இன்புசேர்நீயே
மேவல்சேர்தேவர் விளங்கும்சொல்நீயே
விண்ணுயிம் மண்ணுதிநீயே
ஆவல்கொண்டேற்று மருந்தவமுனிகள்
அருமைகொள் திருவுளம்நீயே
சேவடி தொழுதுன் திருவடிகாணக்
கேடவும் தெளிவுறும் தெளிவே
காவடியேற்கும வெள்ளியங்கிரிவாழ்
கர்த்தனே ஓம்நமசிவமே

(16)

ஊழியம்செய்து ஊழ்வினைபோக்க
உறுதிகொண்டிருதயமொரு
நாழியும்செகாதனையெனதுளத்தில்
நம்பினேனையம்பிகைபாகா
கோழியின் கொடிகொள் குமரனையின்ற
குஞ்சரமுகத்தவன் வலஞ்சூள்
காளிகங்காளி சூலிபைசாசம்
கழல் கொள பேர்க்கும் நின்பாதத்
தூளிதப பொற்றின் திருவடி போற்றித்
தொழுதிடபொழுதினியேது
ஆழிசூழுலகு வெள்ளியங்கிரிவாள்
அப்பனே ஓம்நம சிவமே

(17)

சூதுகளில்லை தொழுதள தஞ்சம்
துதிக்கவே விதிக்குநின் விந்தை
ஓதுமின் மஞ்சன் துயர்களை யோர்ந்து
ஓட்டிடெனக் கேட்டநற்பொருளை
வாதுகொள்ளாது நீ தயைசெய்து
வகுத்துநின் பகுத்தறிவூட்டி
தீதகளென்னைச் சேர்ந்தணுகாமல்
செய்திடவேணுமுன் றிறமை
சாதுவே உன்னைச் சதமென நம்பும்
தனையனை யாட்கொளும் தருவே
மாதுமைபாகன் வெள்ளியங்கிரிவாழ்
வள்ளலே ஓம்நம சிவமே

(18)

காமசாகரத்தின் கவலையிலுழன்று
கஷ்டமுமுற்றதும் போதும்
நாமம்நான் துதிக்க நல்லருளுதிக்க
நத்துமென் சித்தசுத்தான
நேமமே செய்து நிலைதவராது
நிற்குண நற்புக்கொள்ளென்னை
க்ஷேமஞ்செய்துந்தன் தெருசனை தந்தென்
றீவினைபோக்கிடு திருவே
நாமகள் போற்றும் பாவுநின் றாட்டும்
நற்பதமலரடிகாட்டும்
பூமகள் துதிக்கும் வெள்ளியங்கிரிவாழ்
புனிதனே ஓம்நம சிவமே

(19)

கயமுகாசூரன் சிரமதையறுத்து
கணபதிக்கீய்ந்த பின்சேலை
நயமுடனீத்துப் போர்த்தியநன்பே
நம்பினே னின்பதம் கோர்த்துப்
பயமுடனேற்றிப் பணியநின்னருளை
பகர்ந்திடப்பார்த்திடும் பரனே
தயவுவைத்தென்னைச்சூழ் வினைபோக்கி
தன்யமுங்கன்யமுங்கொடுப்பாய்
சூயவனேயென்னைக் கொண்டுமென்றுளக்
கோறினேன் தேரிடசெய்மா
சுயமென்னைக்காரும் வெள்ளியங்கிரிவாழ்
சுத்தனே ஓம்நம சிவமே

(20)

பரிதிரூளுலகம் படைக்கவின்பரனை
பாவலி நாவினிலின் சொல்
சிறிதுநான் பாடத் தெளிவுறச்செய்வாய்
சித்தசேருத்தமசீகா
விரிமலர்ப்பாதம் கதிகளை நவ
வேண்டினேனுண்டருள் வேதா
திரிபுரதகனு கரியுரிக்கோலின்
தெருசனைபதுகரவேனும்
கரிமுகன் வேலன் றன்னையின்றெடுக்க
கர்த்தனே வித்துச்சாத்தான
நெரிபிசகாது வெள்ளியங்கிரிவாழ்
நிர்த்தனு ஓம்நம சிவமே (21)

இன்பதுன்பங்களிரண்டையும் சேர்த்தி
இசைத்தொரு திருவுருவாக்க
அம்புசேர்மண்ணை யள்ளிபைதெள்ளி
அமைத்துநிரம்கொளவணைத்து
என்புதோல் தசையிலிசைநரம்பதாவும்
யிபல்புபஞ்சரிவு நற்சுவையும்
தென்புசேர் வித்த தின்புயதீரா
ஜெகத்குருநாதனேயென்னை
உந்துணைசேர்த்தி நல்வழிகாட்டி
ஓதுவாயுனதுபதேசம்
விண்பதிபுகளும் வெள்ளியங்கிரிவாழ்
வித்தகாஓம்நம சிவமே (22)

மெய்யென்ற ஜலமும் பொய்யென்றமண்ணும்
மிசைத்துமேசுவரதுவாக
வெய்யவன் காய்ந்து அப்புவையிழுக்க
வெண்டுபோல் நின்றழிசுவரும்
அய்யமிலாது கண்டெனதுளத்தி
லர்ச்சிக்குமுச்சிதபாதம்
துய்யநல்மலரை சொரிந்தியல்வோடு
துதிக்கவென்னிருளது போகச்
செய்தருள் தேக்கும்மையரவோனே
செந்தமிழ்புனைக்கசிமாமே
நொய்யல்மா நதியூர் வெள்ளியங்கிரிவாழ்
நூல்புகள் ஓம்நமசிவமே (23

ஆசிகள்பேசி நேசமுஞ்செய்து
காசுகள்பரித்திடுங் கரங்கள்
வீசியே மார்பின் துகிலதை விலக்கி
வீதியில் வரவரமறைத்து
கூசியேகுனிந்து போவதுபோலக்
கூர்விழி சைகைசெய்தோசி
வேசியராசைவிலகினேனின்ப
விற்பள மலரடித்தாளை
பூசிக்கும் தன்மை பொருந்திடவெனக்கு
புத்திபைக்கொடுக்க நீபொருந்த
காசினிபுகழும் வெள்ளிபங்கிரிவாழ்
கர்த்தனே ஓம்நமசிவமே (24)

பஞ்சறிவுடையோர் மானிடஜென்மம்
படைத்தெனை யுலகினில் விடுத்து
நஞ்சிலும் கொடிய பாவையருசை
நலமெனத்துயர்ந்துனைமறந்து
மிஞ்சியே காமவெட்கையில்வெதும்பி
வீசிடுநாரிகள்நேசம்
துஞ்சவதென்று நின்னருளதுகொண்டே
தொழுதிடப்பழுதிலையுண்டு
கெஞ்சினேனுந்தன் மஞ்சனுமென்மேல்
கிருபைவைத்தாள்க்கொளக்கெதிநீ
அஞ்சலென்றுள்வாய் வெள்ளியங்கிரிவாழ்
அத்தனே ஓம்நமசிவமே (25)

அரவொடு குரங்கு ஆமையும் சுணங்கன்
ஆவையுமசேர்த்துயிக்கூட்டில்
உரவுகள்செய்து வாழவும்வைத்தாய்
ஒன்றுடனொன்றுசேராம
லிரவுடன் பகலாயேங்கினான்தேங்க
எண்ணிணானெண்ணியேவுண்ணிப்
பாவியே கெட்டப்புத்தியை நாடப்
பார்க்குதேயென்னனான்சேய்வேன்
குறவர்கள்துதிசெய்யும திருதாளைக்
கொடுத்தருள் புரியிதுதருணம்
திரமதுபூண்ட வெள்ளிபங்கிரிவாழ்
தேவனேஓம்நமசிவமே (26)

பேய்நடமாடும் சுடலையிலன்று
பெண்ணைதச்சுமந்திடும்பித்தா
சேய்உனைத்தேடி திரிந்தலைந்தேங்கச்
செய்வதுமுமதழகாமோ
தாய்மகன் குற்றம் பொறுப்பதுமிலையா
தந்தைக்கு அம்முறையிலையா
பாய்மரக்கலம்போல் வாருதியூறும்
பக்குவத்துற்றயானிந்த
நாயனைக்காத்து நற்பதம் தந்தாள்
நம்பினனும்பர்கொண்டேற்றி
ஆய்தவஞ்சூளும் வெள்ளியங்கிரிவாழ்
அத்தனேஓம்நமசிவமே

(27)

ஆறுபோல் செல்வம் ஆகுமென்றெண்ணி
அலைந்துநானுந்தனை நண்ணி
தாருமாருகத்திரிவதும் விட்டுச்
சரணமென்றுந்தனைநாடி
பாருளோர்யாரும் பாடிநின்சேர்வை
பற்றுதலொற்றுமைகாணக்
கூறும் இம்மாலை கோருநின்றனைக்
கொடுத்தெனைபாருமிவ்வேளை
தேருதல்சொல்லியெந்தனைக்காத்த
சிறந்தவுன்வெள்விடையேறிப்
பாரும்வந்தென்னை வெள்ளியங்கிரிவாழ்
பரமனே ஓம்நம சிவமே

(28)

காவடியெடுத்துன் சேவடிகாணக்
கருகினேனுருகிகொண்டென்றுன்
பூவடிதந்தென் தீவினையகற்றப்
பொருந்துவதென்றுமுன்சுவையை
நாவடிகூட்டி நல்லருளூட்டி
நற்கதிதந்தெனையாளத்
தேவர்களென்றும் பாமலர் தூற்றும்
செல்வமேசொல்வதற்கரிய
நாவலர் மெச்சும் நறுமலர்ப்பதக்காழ்
நம்பினனும்பதம்சேர
எவ்யான் பெற்றேன் வெள்ளியங்கிரிவாழ்
எம்பிரான் ஓம்நம சிவமே

(29)

ஒருமையாயிருக்கும் உத்தமர் தங்கள்
உரவுகள் செய்துமதருளே
தருகவே நிந்தன் பக்திசேர்த்துன்றன்
தமியனையாள்க்கொளத்தருவே
குருவுபதேசம் பெருவது முன்னால்
கொள்கைவேரே தினிக்காணேன்
அருமைசேருந்தன் செயலது வல்லால்
யாதுவோர்பய்ன துகாணேன்
பருவதமான கல்வியின்பொருளைப்
பகர்ந்தருள் கொடுத்திடும்பரனே
திருவுருவான வெள்ளியங்கிரிவாழ்
தேவனே ஓம்நம சிவமே (30)

அன்புகொண்டுந்தன் அருளதைச்சேர
அரகராவென்றுனைத்தேடி
விண்பதிபுகவ யென்னைநீயாழ
வேண்டுமேதாண்டவப்பாதம்
பண்புசேருந்தன் பங்கையற்றுளைப்
பணிந்துமே துணிந்துகொண்டேற்ற
தென்புதங்காண்டுன் தெருசனைதரவும்
சித்தமதன்றிவேறேது
சிம்மபமாக வந்துமே காருன்
சிறியன்தாமோதரன் தன்னை
பொன்மயமான வெள்ளியங்கிரிவாழ்
புண்ணியா ஓம்நம சிவமே (31)

ஐங்கரன் முருகன் சங்கரன் தேவி
அம்மையும் அரிபயன் வாழி
மங்களஞ்சேரும் லக்ஷிமி வித்வம்
வழங்கும் நல்வாணியும் வாழி
பங்கமிலா தென் தந்தைதாய் குருவின்
பதமலர்க்காளிணை வாழி
திங்களும் பருதி சேர்தவவிண்மண்
தேர்வெள்ளிமாமலை வாழி